


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 319 | 4 Pages | 14.6.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 319 | 4 பக்கங்கள் | 14.6.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**இன்னா எனத்தா னுணர்ந்தவை துன்னாமை**

**வேண்டும் பிறன்கட் செயல்**

**விளக்கம்:**

**ஒருவன் துன்பமானவை என்று தன் வாழ்க்கையில் கண்டு உணர்ந்தவைகளை மற்றவனிடத்தில் செய்யாமல் தவிர்க்க வேண்டும்.**

## 53 வயது நபருடன் 27 வயது இளம்பெண் 2வது திருமணம்: இரவில் உல்லாசத்திற்கு அழைப்பு...அடுத்த நடந்த விபரீதம்



மும்பை, ஜூன் 14

மத்தியபிரதேச மாநிலம் இந்தூரை சேர்ந்த தொழில் அதிபர் ராஜா ரகுவன்ஷி. திருமணமான இவர் கடந்த மாதம் மேகாலயாவுக்கு தேனிலவு சென்றபோது, மனைவி சோனமின் சதித்திட்டத்தால் கூலிப்படை மூலம் கொடூரமாக கொலை செய்யப்பட்டார். காதலரை கரம்பிடிக்க முடியாமல் போனதால் இவர் இந்த கொடூர கொலையில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இந்த கொலை தொடர்பாக சோனம் மற்றும் 4 பேரை போலீசார் இதுவரை கைது செய்துள்ளனர். இந்த சம்பவத்தின் பரபரப்பு இன்னும் தணியாத நிலையில் மராட்டிய மாநிலத்தில் மற்றொரு அதிர்ச்சி சம்பவம் அரங்கேறி உள்ளது.

இங்குள்ள சாங்கிலி மாவட்டம் குப்வாட் தாலுகாவில் வசித்து வந்தவர் அனில் லோகண்டே(வயது53). இவரது முதல் மனைவி புற்றுநோயால் இறந்துவிட்டார். இதையடுத்து அனில் லோகண்டே கடந்த 15 நாட்களுக்கு முன்பு ராதிகா என்ற 27 வயது பெண்ணை 2வது திருமணம் செய்துகொண்டார்.

ஆனால் தாம்பத்திய வாழ்க்கையை தொடங்குவதில் ராதிகாவுக்கு விருப்பம் இல்லை எனத்தெரிகிறது. இந்தநிலையில் சம்பவத்தன்று இரவில் அனில் லோகண்டே மனைவியை தாம்பத்திய உறவுக்கு அழைத்தார். இதற்கு அவரது மனைவி எரிச்சலடைந்தார். அவர் தனது விருப்பத்தை நிறைவேற்றுமாறு தொடர்ந்து வலியுறுத்தவே, கணவன் மனைவி இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் அனில் லோகண்டே உறங்க சென்று விட்டார்.

தனது வாழ்க்கையை நினைத்து புலம்பிய ராதிகா கணவரை கொலை செய்ய துணிந்தார். நேற்று முன்தினம் அதிகாலை 12.30 மணி அளவில் அனில் லோகண்டே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததாக தெரிகிறது. அப்போது ராதிகா வீட்டில் இருந்த கோடரியை எடுத்து வந்து படுக்கையில் இருந்த கணவரை கண்மூடித்தனமாக தாக்கினார்.

இதில் தலையில் பலத்த வெட்டுக்காயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். பின்னர் நடந்த சம்பவத்தை தனது உறவினருக்கு போன் செய்து ராதிகா தெரிவித்தார்.

இதற்கிடையே தகவலின்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து ரத்த வெள்ளத்தில் கிடந்த அனில் லோகண்டேவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் அவரை கொலை செய்த ராதிகாவை போலீசார் கைது செய்தனர். அவர் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி போலீஸ் காவலில் எடுத்து விசாரணை நடத்தி வருகின்றனர். ராதிகாவின் விருப்பத்துக்கு மாறாக அவரது தந்தை வயதுள்ள அனில் லோகண்டேவுக்கு திருமணம் செய்துவைத்தார்களா?, கணவருடன் தாம்பத்தியம் நடத்த விருப்பம் இல்லாவிட்டால் வீட்டை விட்டு வெளியேறாமல், அவரை கொலை செய்ய துணிந்தது ஏன்? என்பது போன்ற தகவல்களை திரட்ட போலீசார், ராதிகாவிடம் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வெப்பத்தில் தவிக்கும் டெல்லி; சிவப்பு எச்சரிக்கை விடுத்த அதிகாரிகள்



புதுடெல்லி, ஜூன் 14

தலைநகர் டெல்லி வெப்பத்தில் தகித்துக் கொண்டிருக்கிறது. வெயில் அதிகபட்சமாக 113 டிகிரி வரை சென்றிருக்கிறது. ஆனாலும் காற்றின் ஈரப்பதம் காரணமாக அது 125 டிகிரியை உணர வைக்கிறது. இரவில்கூட பகல் போன்ற வெப்ப சூழலே தென்படுகிறது. ஏ.சி. பயன்படுத்தினாலும் பெரிய அளவில் இதம் இல்லை. ஏ.சி. வசதி இல்லாத மக்களின் நிலைமை பரிதாபமாகவே தெரிகிறது.

இந்த நிலையில் வெப்ப அலை காரணமாக டெல்லிக்கு நேற்று சிவப்பு நிற எச்சரிக்கை விடப்பட்டது. இன்றும் (வெள்ளிக்கிழமை) எச்சரிக்கை நீடிக்கிறது. இன்று மாலைக்கு பிறகு நிலைமை ஓரளவு சரியாகலாம் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்து உள்ளனர். டெல்லி மட்டுமல்லாது அண்டை மாநிலங்களிலும் குறிப்பிட்ட இடங்களில் வெப்ப அலை கடுமையாக உள்ளது.

## தெலுங்கானாவில் கனமழை: மின்னல் தாக்கி 6 விவசாயிகள் பலி



நகரி, ஜூன் 14

தெலுங்கானா மாநிலம் ஆதிலாபாத் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக கனமழைபெய்துவருகிறது. இதற்கிடையே காதிகூட மண்டலம் பிப்பிறி என்ற இடத்தில் விவசாயிகள் நேற்று தங்களது நிலங்களில் மக்காச்சோளம் விதைக்க தயாரானார்கள். 14 விவசாயிகள் இந்த பணியில் ஈடுபட்டனர். அந்த சமயத்தில் திடீரென இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. உடனே அவர்கள் அருகில் இருந்த குடிசை அருகே மழைக்காக ஒதுங்கி நின்றனர்.

அப்போது மின்னல் தாக்கி 3 விவசாயிகள் உயிரிழந்தனர். இதே மாவட்டத்தில் வேலமண்டலத்தில் மின்னல் தாக்கி 2 பெண் விவசாயிகளும், சாங்கிடி என்ற இடத்தில் ஒரு பெண்ணும், சோன்காஸ் என்ற பகுதியில் சுனிதா என்பவரும் மின்னல் தாக்கி இறந்தனர். இவ்வாறு ஒரே நாளில் மின்னல் தாக்கி 6 விவசாயிகள் பலியாகினர்.

# உடன் பிறப்பே வா என்ற தலைப்பில் ஒன் டு ஒன் மூலம் முதல்வர் தொகுதி நிர்வாகிகளுடன் நேரடி சந்திப்பு



சென்னை, ஜூன் 14

"உடன் பிறப்பே வா" என்ற தலைப்பில் ஒன் டூ ஒன் மூலம் தொகுதி நிர்வாகிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து பேசியுள்ளார். முதல் நாளான 3 தொகுதி நிர்வாகிகள் கருத்துக்களை முதல்வரிடம் தெரிவித்தனர். தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ளன. தேர்தலை எதிர்கொள்ள ஆளுங்கட்சியான திமுக முன்கூட்டியே தயாராகி வருகிறது. அதன் ஒருபகுதியாக 8 மண்டல பொறுப்பாளர்கள், 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தொகுதி பார்வையாளர்களை நியமித்து தமிழகம் முழுவதும் கூட்டங்களை நடத்தி, தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த 1ம் தேதி மதுரையில் திமுக பொதுக் குழு கூட்டம் நடந்தது. பொதுக்குழு கூட்டத்தில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், " என்னைப் பொறுத்தவரையில், நீங்கள் அனைவரும் ஒரு உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும். என் வாக்குச்சாவடியில் திமுக கூட்டணியை வெற்றி பெற வைப்பேன் என் தொகுதி – வெற்றித் தொகுதி என்ற உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும். பாஜகவிடம் இருந்து தமிழ்நாட்டை காப்பாற்றும் கட்சி கட்டமைப்பும், கொள்கை பிடிப்பும், வலிமையான தலைமையும், நம்மிடம் மட்டும் தான் இருக்கிறது என்று தமிழ்நாட்டில் இருக்கும் சின்னகுழந்தைக்குக்கூட தெரிந்திருக்கிறது.

ஆனால், தேர்தல் வெற்றிக்கு இதுமட்டும் போதாது! பூத் அளவில் வெற்றி பெறும் வாக்குகள்தான் தொகுதியில் வெற்றி பெற வைக்கும். தொகுதிகளை வென்றால்தான் ஆட்சி! அதனால், பூத் அளவிலான மைக்ரோ மேனேஜ்மெண்டும் மிக முக்கியம். தமிழ்நாடு முழுவதும் எத்தனை உட்கட்டமைப்பு பணிகள் நடந்துகொண்டு இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். அதெல்லாம் தொய்வில்லாமல் சொன்ன தேதியில் முடிக்கப்பட்டு, செயல்பாட்டுக்கு வர வேண்டும் என்றால், மீண்டும் நம்முடைய ஆட்சிதான் வர வேண்டும் என்று புரிய வையுங்கள். ஜூன் முதல் வாரத்தில் இருந்து, என்னுடைய பணி என்ன என்றால், திமுக நிர்வாகிகளை தொகுதி வாரியாக, அண்ணா அறிவாலயத்தில் நான் சந்திக்க இருக்கிறேன். அப்போது இன்னும் விரைவாக, ஒன் டூ ஒன் பேசுவோம். ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு பொறுப்பை நான் வழங்கியிருக்கிறேன். அதை சிறப்பாக – எந்த விமர்சனமும் இல்லாமல், செய்து காட்டினால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி இருக்க முடியாது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தப்படி திமுக நிர்வாகிகளை தொகுதி வாரியாக இன்று முதல் சந்திக்க தொடங்கியுள்ளார். "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் இந்த சந்திப்பு நடைபெறுகிறது. முதல் நாளான இன்று சிதம்பரம், விழுப்புரம், உசிலம்பட்டி தொகுதிகளை சேர்ந்த நிர்வாகிகளை சென்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து பேசினார். அதுவும் தொகுதி வாரியாக நிர்வாகிகளை ஒன் டூ ஒன் மூலமாக முதல்வர் மு.க.ஸ்டா லின் சந்தித்து பேசி வருகிறார்.

இதனால், நிர்வாகிகள் மனம் விட்டு தங்கள் கருத்துக்களை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தெரிவித்து வருகின்றனர். சந்திப்பின் போது அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப் பேரவை தேர்தல் குறித்தும், வெற்றி வாய்ப்பு தொகுதிகளில் எவ்வாறு இருக்கிறது. மக்கள் திமுக ஆட்சியை பற்றி என்ன நினைக்கிறார்கள். திமுக அரசு செய்த மக்கள் நலன் திட்டங்கள் குறித்து மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள். மக்கள் இன்னும் என்ன அரசிடம் இருந்து எதிர்ப்பார்க்கிறார்கள், தொகுதிகளில் எம்எல்ஏக்களின் செயல்பாடு எப்படி உள்ளது. தற்போதுள்ள எம்எல்ஏ பற்றி என்ன கூறுகிறார்கள் என்று கருத்துக்களை கேட்டு வருவதாக கூறப்படுகிறது.

நிர்வாகிகள் தெரிவிக்கும் கருத்துக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் கவனமுடன் கேட்டு தெரிந்து கொண்டார். நிர்வாகிகள் தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் நடவடிக்கை இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. தொகுதி வாரியாக நிர்வாகிகளை ஒன் டூ ஒன் மூலமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து வருவதால் திமுகவினர் மகிழச்சியில் உள்ளனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து 234 தொகுதி நிர்வாகிகளையும் சந்தித்து பேச உள்ளார்.

## சீர்காழியில் கல்வி பயிற்சி பட்டறை



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் நம்ம சீர்காழி பவுண்டேஷன் சார்பாக பள்ளி மாணவ மாணவிகளுக்கான நினைவாற்றல் பயிற்சியானது சபாநாயக முதலியார் இந்து மேல்நிலை பள்ளியின் சிவாகலையரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தலைமையாசிரியர் எஸ்.முரளிதரன் தலைமை தாங்கினார். உதவி தலைமை ஆசிரியர்கள் என்.துளசிரங்கன், டி .சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சீர்காழியின் பிரபல மருத்துவர் டாக்டர். பி. முத்துக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு நினைவாற்றலின் முக்கியத்துவம் குறித்து அறிவுரை வழங்கினார்.

நம்ம சீர்காழி பவுண்டேஷன் நிறுவனரும் பயிற்சியாளரும் ஆகிய டாக்டர் சி.மகேஸ்வரன் மாணவ மாணவிகளுக்கு பயிற்சியினை அளித்தார். இதில் சுமார் 400க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் டி. முரளி ,பி மார்கண்டன், சக்தி வேல் ,கபிலன் ஆகியோர்களுடன் இணைந்து நம்ம சீர்காழி பவுண்டேஷன் பொறுப்பாளர்கள் வெங்கடேஸ்வரன் ஜெயசீலன் ஆகியோர் செய்திருந்தனர். நிகழ்ச்சியின் நிறைவாக நம்ம சீர்காழி பவுண்டேஷன் தலைவர் பூவரசன் அவர்கள் நன்றி கூறினார்.

## வடகரை ஜாய் மெட்ரிகுலேஷன் பள்ளி, மற்றும் ஸ்பெக்ட்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் இருந்து மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்



தென்காசி மாவட்ட அட்யா பட்யா அசோசியேஷன் சார்பில் 2 வது சப் ஜூனியர் மாவட்ட போட்டிகள் இலத்தூர் ஸ்பெக்ட்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது, ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு என தனித்தனியாக நடைபெற்ற போட்டியில் ஆழ்வார்குறிச்சி குட் ஷெப்பர்ட், இலத்தூர் ஶ்ரீ ராம் மெட்ரிகுலேஷன் பள்ளி, கடையநல்லூர் கிங் ஆப் கிங்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, இடைகால் அரசு மேல்நிலைப்பள்ளி, தென்காசி ஐசிஐ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வடகரை ஜாய் மெட்ரிகுலேஷன் பள்ளி, மற்றும் ஸ்பெக்ட்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் இருந்து மாணவ மாணவிகள் பங்கேற்றனர்,

லீக் முறையில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற அணிகள் கால் இறுதி, அரை இறுதி, மற்றும் இறுதி போட்டி நடைபெற்றது போட்டியினை தென்காசி ஒன்றிய அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் தொழிலதிபர் செல்வகுமார், பள்ளி முதல்வர் ஹெனோ சீதா ஆகியோர் துவக்கி வைத்தனர்,

ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் ஆழ்வார்குறிச்சி குட் ஷெப்பர்ட் பள்ளி முதலிடமும், ஆண்கள் பிரிவில் இலத்தூர் ஶ்ரீ ராம் மெட்ரிகுலேஷன் பள்ளி இரண்டாமிடமும், ஸ்பெக்ட்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மூன்றாமிடமும், கடையநல்லூர் கிங் ஆப் கிங்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி நான்காவது இடம் பிடித்தது, பெண்கள் அணியினர் இடைகால் அரசு மேல்நிலைப்பள்ளி இரண்டாமிடமும் ஸ்பெக்ட்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மூன்றாமிடமும், வடகரை ஜாய் மெட்ரிகுலேஷன் பள்ளி நான்காவது இடம் பிடித்தனர்,

தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான செ கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா, மற்றும் ஸ்பெக்ட்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் மருத்துவர் அய்யா திருவன் ஆகியோர் சிறப்புரையாற்றி பரிசுகள் வழங்கி மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்தினர், இந்நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட அதிமுக துணை செயலாளர் பொய்கை சோ மாரியப்பன், செங்கோட்டை ஒன்றிய கழக செயலாளர் அச்சன்புதூர் பேரூராட்சி மன்ற தலைவருமான டாக்டர் சுசீகரன், தெற்கு மாவட்ட இலக்கிய அணி செயலாளர் நெல்லை முகிலன், தெற்கு மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் சிவசீத்தாராம், தெற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தலைவரும் கவுன்சிலருமான சந்துரு, தென்காசி நகர கழக அவைத்தலைவர் முத்துக்குமாரசுவாமி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்

போட்டியில் உடற்பயிற்சி ஆசியர்கள் பொன்னம்மாள், பேச்சிமுத்து, சூர்யா, பிரதீப், மீனா, ரமேஷ், ஜான்சன் உள்ளிட்ட பல ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் நடுவர்களாக உமா மகேஸ்வரன், சிவ சைலப்பன், அய்யப்பன், ஆகியோர் செயல்பட்டனர் போட்டியினை தென்காசி மாவட்ட அட்யா பட்யா அசோசியேஷன் தலைவர் சாந்தசீலன், செயலாளர் வைர முத்து பொருளாளர் குத்தாலபெரு மாள், துணை தலைவர் ராஜா, மற்றும் செல்வராம் போட்டி ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

## பவானிசாகர் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு அரசு ஆணை





சென்னை, ஜூன் 13

தமிழக அரசின் நீர்வளத்துறை செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து காலிங்கராயன் வாய்க்கால்களிலுள்ள பாசன நிலங்களுக்கு 20252026 ஆம் ஆண்டு, முதல் போக பாசனத்திற்கு 16.06.2025 முதல் 13.10.2025 வரை 120 நாட்களுக்கு, 5184.00 மில்லியன் கன அடிக்கு மிகாமல், தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், ஈரோடு மாவட்டத்திலுள்ள, பவானி, ஈரோடு, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டங்களிலுள்ள 15743 ஏக்கர் பாசன நிலங்கள் பாசன வசதி பெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## காட்டுமன்னார்கோவில்: காவல் ஆய்வாளர் சஸ்பெண்ட்

கடலூர், ஜூன் 14

காட்டுமன்னார்கோவிலில் நடந்த கொலை சம்பவம் தொடர்பாக ஆய்வாளர் உள்பட 3 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

காவல் ஆய்வாளர் ஆறுமுகம், உதவி ஆய்வாளர் அன்பழகன், காவலர் ஆகிய 3 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். கோயில்பத்து பகுதியைச் சேர்ந்த பிரவீன்ராஜ் என்பவர் நேற்று கொலை செய்யப்பட்டார்

## பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் பஸ் படிக்கட்டில் பயணிக்கக் கூடாது: போக்குவரத்து போலீசார் அறிவுரை

அண்ணாநகர், ஜூன்14

சென்னை அண்ணாநகர், அமைந்தகரை, அரும்பாக்கம் மற்றும் திருமங்கலம் பகுதிகளில் பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் பேருந்து படிக்கட்டில் தொங்கியபடி பயணம் செய்வதால் பிரச்னை ஏற்படுகிறது. இவற்றை தடுக்க போக்குவரத்து போலீசார் பலகட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதுசம்பந்தமாக மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து அண்ணாநகர் போக்குவரத்து துணைஆணையர் ஜெயகரன் தலைமையில், அந்தந்த பகுதிகளில் உள்ள போக்குவரத்து காவல்நிலைய இன்ஸ்பெக்டர்கள் கண்காணித்த பேருந்து படிக்கட்டில் தொங்கியபடி பயணம் செய்யும் மாணவர்களை பிடித்து எச்



சரிக்கை செய்ததுடன் தொடர்ந்து அறிவுரை கூறி அனுப்பி வைக்கின்றனர். இந்தநிலையில், இதுசம்பந்தமாக அண்ணாநகரில் உள்ள அரசு பள்ளியில், மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதில், அண்ணாநகர் போக்குவரத்து இன்ஸ்பெக்டர் நரேஷ்குமார் பேசியதாவது; பேருந்தில் மாணவர்கள் செல்லும் போது இருக்கையில் அமர்ந்து பயணம் செய்ய வேண்டும். படிக்கட்டில் தொங்கியபடி பயணம் செய்வதை தவிர்க்கவேண்டும். பைக்கில் செல்லும் போது கண்டிப்பாக தலை கவசம் அணிந்து செல்லவேண்டும். ஒரே பைக்கில் 3 பேர் பயணம் செய்யக்கூடாது. மதுபோதையில் வாகனம் ஓட்டக் கூடாது. 18 வயது பூர்த்தியாகாமல் வாகனங்களை ஓட்டக்கூடாது.

அப்படி ஓட்டினால் பெற்றோருக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும். பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் இரவு நேரங்களில் ரேஸ் பைக் ஓட்டக்கூடாது. ரேஸ் பைக் ஓட்டுவது கண்டறிந்தால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூறினார். இதையடுத்து, ''பேருந்தில் படிக்கட்டில் பயணம் செய்யமாட்டோம்.

பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் அதிவேகத்தில் வாகனங்களை ஓட்டி செல்லமாட்டோம். ஒரே பைக்கில் 3 பேர் பயணிக்கமாட்டோம். தலைகவசம் கண்டிப்பாக அணிந்து செல்வோம்' என்று மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

## 10ம் வகுப்பு விடைத்தாள் நகல் பதிவிறக்கம் செய்து மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கலாம்: தேர்வுகள் இயக்ககம் அறிவிப்பு




சென்னை, ஜூன் 14

அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள அறிக்கை: 10ம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள் நகல் பெற மாணவ, மாணவியர் விண்ணப்பிக்கலாம் என்று தேர்வுத்துறை அறிவித்து இருந்தது. அதன்படி, விண்ணப்பித்த மாணவ, மாணவியர் இன்று முதல் 17ம் தேதி வரை அரசுத் தேர்வுகள் இணைய தளமான www.dge.tn.gov.in என்ற இணைய தளத்துக்கு சென்று பிறந்த தேதியை பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்கான விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விடைத்தாள் நகலை பதிவிறக்கம் செய்த பிறகு மறுகூட்டல் அல்லது மறு மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், மேற்கண்ட அதே இணைய தளத்தில் மறு கூட்டலுக்கான விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பத்தை பூர்த்தி செய்து இரு நகல்கள் எடுத்து, 16ம் தேதி முதல் 18ம் தேதி வரையில் அந்தந்த மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறு கூட்டல் மற்றும் மறு மதிப்பீட்டுக்கான கட்டணத்தை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணமாக செலுத்த வேண்டும். இதற்கான முகவரியும் இணைய தளத்தில் அறிந்து கொள்ளலாம். தென்காசி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களைசேர்ந்தமாணவ, மாணவியர் மறுகூட்டல் அல்லது மறு மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்க விரும்பினால், அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்களை ஒப்படைக்க வேண்டும். கட்டணத்தை பொறுத்தவரையில் மறு மதிப்பீட்டுக்கு பாடம் ஒன்றுக்கு ரூ.505ம், மறு கூட்டல் செய்ய பாடம் ஒன்றுக்கு ரூ.205ம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர், பழங்குடியினர் பள்ளி விடுதிகளில் தங்கி பயில விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜூன் 14

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: 2025 26ம் கல்வியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பள்ளி / ஐடிஐ/டிப்ளோமா/கல்லூரி விடுதிகளில் கட்டணமில்லாமல் தங்கி பயில்வதற்கு ஆர்வமுள்ள மாணாக்கர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் இணையவழியில் 10.6.2025 முதல் பெறப்படுகிறது. ஆர்வமுள்ள மாணாக்கர்கள் https:nallosai.tn.gov.in என்ற இணைய தள முகவரியை பயன்படுத்தி விண்ணப்பித்திடுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடுதிகளில் தங்கி பயில்வதற்கு மாணாக்கர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்துக்குள் இருக்க வேண்டும். மேலும், மாணாக்கர் மத்திய, மாநில அரசின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் தங்கி பயில வேண்டும். கூடுதல் தகவல்களுக்கு 18005997638 என்ற கட்டணமில்லா தொலைபேசிஎண்ணைஅலுவலகநேரத்தில்தொடர்பு கொள்ளலாம்.

## கட்டுமான தொழிலாளர்கள் ஓய்வெடுக்க புதிய ஏற்பாடு




சென்னை, ஜூன்14

கட்டுமான தொழிலாளர்கள் ஓய்வெடுக்க புதிய ஏற்பாடு செய்துள்ளனர். தொழிலாளர் நலத்துறை மற்றும் கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் இருந்து தகவல்கள் பெறப்பட்டு, கட்டுமான தொழிலாளர்கள் அதிகம் கூடம் 3 இடங்களில் ஓய்வுக் கூடங்கள் அமைய உள்ளன. அதற்கான மாதிரி புகைப்படத்தை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் பகிர்ந்தார்.

## சென்னையில் இன்ஸ்பெக்டர்கள் 21 பேர் பணியிட மாற்றம்; போலீஸ் கமிஷனர் அருண் நடவடிக்கை

சென்னை, ஜூன் 14

சென்னை மாநகர காவல்துறையில் 21 இன்ஸ்பெக்டர்கள் பணியிடமாற்றம் செய்து போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவிட்டுள்ளார். சென்னை காவல்துறை போலீஸ் கமிஷனர் அருண் நேற்று பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: சென்னை நுண்ணறிவுப்பிரிவு இன்ஸ்பெக்டராக இருந்த உஷாராணி மத்திய குற்றப்பிரிவுக்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த சேகர் சிங் புதிய வண்ணாரப்பேட்டை சட்டம் ஒழுங்கிற்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த தாமஸ் பேசின்பாலம் சட்டம் ஒழுங்கிற்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த தீபக்குமார் திருமங்கலம் சட்டம் ஒழுங்கிற்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த செல்வராணி மத்திய குற்றப்பிரிவுக்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த லோகநாதன் யானைக்கவுனி சட்டம் ஒழுங்கு, காத்திருப்போர் பட்டியலில் இருந்த சரவணன் துறைமுகம் குற்றப்பிரிவு, காத்திருப்போர் பட்டியலில் இருந்த வனிதா விருகம்பாக்கம் சட்டம் ஒழுங்கு, காத்திருப்போர் பட்டியலில் இருந்த விஜயலட்சுமி ஸ்டான்லி அரசு மருத்துவமனை சட்டம் ஒழுங்கு, புதிய வண்ணாரப்பேட்டை சட்டம் ஒழுங்கில் இருந்த கிருஷ்ணராஜ் நந்தம்பாக்கம் குற்றப்பிரிவு, தலைமை செயலக காலனி குற்றப்பிரிவில் இருந்த ஹரிஹரசுகன் மத்திய குற்றப்பிரிவுக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



கோயம்பேடு குற்றப்பிரிவில் இருந்த உமா மகேஸ்வரி மத்திய குற்றப்பிரிவுக்கும், கோயம்பேடு குற்றப்பிரிவில் இருந்த கோமதி மத்திய குற்றப்பிரிவுக்கும், மீனம்பாக்கம் குற்றப்பிரிவில் இருந்த மங்களலட்சுமி மத்திய குற்றப்பிரிவுக்கும், சென்னை பாதுகாப்பு பிரிவில் இருந்த சிதம்பரபாரதி நொளம்பூர் சட்டம் ஒழுங்குக்கும், சென்னை பாதுகாப்பு பிரிவில் இருந்த முத்தேலு மத்திய குற்றப்பிரிவுக்கும், மத்திய குற்றப்பிரிவில் இருந்த ஹேமாவதி சென்னை பாதுகாப்பு பிரிவுக்கும், திருமங்கலம் சட்டம் ஒழுங்கில் இருந்த சுப்புலட்சுமி திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கும், பேசின் பாலம் சட்டம் ஒழுங்கில் இருந்த சிவகுமார் சென்னை பாதுகாப்பு பிரிவுக்கும், யானைக்கவுனி சட்டம் ஒழுங்கில் இருந்த சரவணன் செம்பியம் குற்றப்பிரிவுக்கும், நீலாங்கரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்த ராஜேஸ்வரி மத்திய குற்றப்பிரிவுக்கும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

## கொடைக்கானலில் 200 அடி பள்ளத்தில் கார் பாய்ந்து விபத்து 8 பேர் உயிர் தப்பினர்



கொடைக்கானல், ஜூன் 14

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலுக்கு நேற்று கேரள மாநிலத்தை சேர்ந்த 8 சுற்றுலாப்பயணிகள் காரில் வந்து கொண்டிருந்தனர். கொடைக்கானல் பழநி மலைச்சாலையில் மேல்பள்ளம் அருகே வந்தபோது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கார், சாலையோர தடுப்பு சுவரை உடைத்துக் கொண்டு சுமார் 200 அடி பள்ளத்தில் பாய்ந்தது. இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக காரில் பயணித்த 8 பேரும் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். தகவலறிந்து வந்த கொடைக்கானல் போலீசார், தீயணைப்பு துறையினர் அவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டு விபத்தில் சிக்கிய காரை மீட்டனர்.

## மிக கனமழைகான எச்சரிக்கை விடுத்த வானிலை மையம்: நீலகிரி, கோவைக்கு விரைந்த பேரிடர் மீட்பு குழுக்கள்!!



கோவை, ஜூன் 15

நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளதால், 2 தேசிய பேரிடர் மீட்புக் குழுக்கள் அங்கு விரைந்துள்ளன. வடக்கு ஆந்திர கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள மத்திய மேற்கு வங்கடக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் தாக்கத்தால் இன்று தமிழகத்தில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதையடுத்து கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்திற்கு இன்றும், நாளையும் கன முதல் மிக கனமழைக்கான ஆரஞ்ச் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. வருகிற 14 மற்றும் 15ம் தேதிகளில் நீலகிரி மாவட்டத்திற்கு அதிகனமழைக்கான ரெட் அலர்ட் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் வருகிற 16ம் தேதி வரை கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல், நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதனையடுத்து இந்த 7 மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது. அதனை தொடர்ந்து கோவை, நீலகிரி மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்த ப்பட்டு ள்ளது. கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டதை தொடர்ந்து கோவை மற்றும் நீலகிரிக்கு இன்று தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையினர் வருகை தர உள்ளனர். அதன்படி கோவை மாவட்டத்திற்கு ஒரு தேசிய பேரிடர் மீட்பு படையினர், 2 மாநில பேரிடர் மீட்பு படையினர் வர உள்ளனர். முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்வதற்காக 60 பேர் கொண்ட குழுக்கள் மீட்பு உபகரணங்களுடன் களத்தில் உள்ளன. இதேபோல் 2 மாநில பேரிடர் மீட்பு படையினர் மதியம் கோவைக்கு வருகை தர உள்ளனர். இவர்கள் மேட்டுப்பாளையம், தொண்டாமுத்தூர் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

## கோழிக்கோடு அருகே சரக்கு கப்பலில் 4வது நாளாக பற்றி எரியும் தீ: கப்பலை ஆழ்கடலுக்கு கொண்டு செல்ல திட்டம்

கோழிக்கோடு, ஜூன்14

அரபிக்கடலில் தீப்பற்றிய சரக்கு கப்பலை ஆழ்கடலுக்கு கொண்டு செல்லும் பணி இன்று மாலை தொடங்கும் என தகவல் வெளியாகியுள்ளது. லைபீரியா கொடியுடைய எம்எஸ்சி எல்சா 3 சரக்கு கப்பல் கொச்சி கடற்கரையில் இருந்து 38 கடல் மைல் தொலைவில் மே 25ம் தேதி மூழ்கியது. கப்பலில் 640 கன்டெய்னர்கள் இருந்தன. இதில் 13 கன்டெய்னர்களில் ஆபத்தான பொருட்களும், 12 கன்டெய்னர்களில் கால்சியம் கார்பைடும் இருந்தன. இவற்றில் சுமார் 100 கன்டெய்னர்கள் கடலில் மிதந்து, ஆலப்புழா, கொல்லம், திருவனந்தபுரம், எர்ணாகுளம், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி கடற்கரைகளில் கரை ஒதுங்கின.



இவற்றில் பிளாஸ்டிக் துகள்கள், பாலித்தீன், கால்சியம் கார்பைடு உள்ளிட்ட ஆபத்தானபொருட்கள் இருந்தன. கேரள அரசு இந்த சம்பவத்தை 'மாநில பேரிடர்' என அறிவித்தது. கன்னியாகுமரி கடற்கரையிலும் பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் ஆபத்தான பொருட்கள் கரை ஒதுங்கியது. இதனால் கடல் மாசுபாடு மற்றும் மீனவர் வாழ்வாதாரத்திற்குஅச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. குமரி மாவட்ட கடற்கரை பகுதியில் உள்ள பிளாஸ்டிக் துகள்களைஅகற்றும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்நிலையில் தனுஷ்கோடி பகுதியிலும் 5 கி.மீ. தூரம் பிளாஸ்டிக் துகள்கள் கரை ஒதுங்கியுள்ளது. இந்த கப்பல் மூழ்கிய பாதிப்புகள் அடங்குவதற்குள், அரபிக்கடலில் மற்றொரு கப்பல் தீ பிடித்து எரிந்து கன்டெய்னர்கள் கடலில் விழுந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிங்கப்பூர் எம்வி வான் கய் 503 என்ற சரக்கு கப்பல் ஜூன் 7ம் தேதி கொழும்பிலிருந்து புறப்பட்டு, மும்பை நோக்கி செல்லும் வழியில், கோழிக்கோடு பேய்பூர் கடற்கரையில் இருந்து 130 கடல் மைல் தொலைவில் 9ம் தேதி கன்டெய்னர் வெடிப்பால் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. இந்திய கடற்படை, கடலோர காவல் படையினர் இணைந்து 18 பணியாளர்களை மீட்டனர். தீயை அணைக்கும் பணிகள் தொடர்ந்து நடக்கின்றன. இந்த தீ விபத்தால் கன்னியாகுமரி கடல் பகுதியில் நேரடியாக பாதிப்பு ஏற்பட்டதற்கான உறுதியான தகவல்கள் இல்லை. இருப்பினும், 100 டன் பங்கர் ஆயில் கப்பலில் உள்ளதால் கடற்கரை பகுதியில் எண்ணெய் கசிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று இந்திய கடல்சார் சேவை மையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் அரபிக்கடலில் தீப்பற்றிய சரக்கு கப்பலை ஆழ்கடலுக்கு கொண்டு செல்லும் பணி இன்று மாலை தொடங்கும் என தகவல் வெளியாகியுள்ளது. சரக்கு கப்பலில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணி 4வது நாளாக தொடர்கிறது. தீயை அணைக்கும் பணியில் 7 கப்பல்கள் ஈடுபட்டு வருகின்றன. சரக்கு கப்பலில் பற்றிய தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தீ மேலும் பரவாமல் இருக்க விமானங்கள் மூலம் ரசாயன பொடி நடவடிக்கை மேற்கொள்ளபப்ட்டுள்ளது.

## சம்பள கணக்குகளை நிர்வகிக்க எஸ்பிஐயுடன் சிஐஎஸ்எப் ஒப்பந்தம்

சென்னை, ஜூன் 14


மத்திய தொழில்துறை பாதுகாப்பு படை (சிஐஎஸ்எப்) வீரர்களின் சம்பள கணக்குகளை நிர்வகிக்க எஸ்பிஐயுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. டெல்லியில் உள்ள சிஐஎஸ்எப் தலைமையகத்தில் நடந்த நிகழ்ச்சியில்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிஐஎஸ்எப் டிஐஜி ரேகா நம்பியார் மற்றும் மும்பை எஸ்பிஐ கார்ப்பரேட் மைய பொது மேலாளர் ரஞ்சனா சின்ஹா ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம் வருகிற 23.5.25 முதல் 22.5.28




வரை 3 ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் சிஐஎஸ்எப் உறுப்பினர்களின் நலன் மற்றும் நிதி பாதுகாப்பிற்கான தொடர்ச்சியான உறுதிப்பாட்டில் ஒரு முக்கிய மைல்கல்லாக இருக்கும். சேவை செய்யும் பணியாளர்களுக்கான பணியாளர் விபத்து காப்பீட்டு தொகையை ரூ.50 லட்சத்திலிருந்து ரூ.1 கோடியாகவும், ஓய்வூதியதாரர்களுக்கு30லட்சத்திலிருந்து 50 லட்சமாகவும் உயர்த்துவது முக்கிய அம்சங்களில் அடங்கும். விமான காப்பீடு ரூ.1.5 கோடியாக (நிபந்தனையுடன்) அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் சலுகைகளில் காலக்கெடு காப்பீடு, மாற்றுத்திறனாளிகளுக்கான காப்பீட்டு தொகை, பூஜ்ஜிய இருப்பு இல்லாத கணக்கு, வருடாந்திர பராமரிப்பு இல்லாத இலவச டெபிட் கார்டுகள், வரம்பற்ற இலவச எஸ்பிஐ ஏடிஎம் பரிவர்த்தனைகள் மற்றும் மத்திய ஆயுத காவல் சம்பள தொகுப்பின் கீழ் பிற வங்கி ஏடிஎம்களில் மாதத்திற்கு 10 இலவச பரிவர்த்தனைகள் ஆகியவை அடங்கும். இந்த தகவலை சென்னைதுறைமுக ஆணைய செயலாளர் தெரிவித்துள்ளார்.

## சென்னை: சாலை வெட்டுகளை சீரமைக்க நிதி ஒதுக்கீடு



சென்னை, ஜூன்14

சென்னை மாநகராட்சியில் சாலை வெட்டுகளை சீரமைக்க 15 மண்டலங்களுக்கு தலா ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சாலை வெட்டுகளால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாவதால் சீரமைக்க சென்னை மாநகராட்சி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

# கத்தியை காட்டி மிரட்டி செல்போன் பறித்த 5 பேர் கைது

திருச்சி, ஜூன் 14
திருச்சி மாவட்டம் வையம்பட்டியையடுத்த துலுக்கம்பட்டியை சேர்ந்தவர் சங்கர் (வயது 48), விவசாயி.

இவர் துலுக்கம்பட்டி ரெயில்வே மேம்பாலம் அருகே நின்று கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக காரில் சென்ற 4 பேர் கத்தியை காட்டி மிரட்டி சங்கர் வைத்திருந்த செல்போனை பறித்து சென்றனர். இதனை பார்த்த அப்பகுதி மக்கள் அவர்கள் 4 பேரையும்மடக்கிபிடித்து வையம்பட்டி போலீசில் ஒப்படைத்தனர்.

விசாரணையில் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம்வேடசந்தூரைசேர்ந்த வசந்தகுமார் (24), மாரிமுத்து(27),சென்னையை சேர்ந்த சஞ்சய் குமார் (25), திருச்சி திருவானைக்கோவிலை சேர்ந்த தினேஷ் (24) என்பது தெரியவந்தது.

இதையடுத்து அவர்கள் 4 பேரையும் போலீசார் கைது செய்ததுடன் காரையும் பறிமுதல் செய்தனர்.

இதேபோல் திருச்சி முதலியார்சத்திரம் ஆலம் தெருவை சேர்ந்த முகமது ரபீக் (21) சத்திரம் பஸ் நிலையத்தில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த கரூர் மாவட்டத்தை சேர்ந்த மணிகண்டன் (21) என்பவர் முகமது ரபீக் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு தப்பி ஓடினார். இதையடுத்து, முகமது ரபீக் அவரை விரட்டி சென்றுபிடித்துகோட்டை போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தார். பின்னர் மணிகண்டனை போலீசார் கைது செய்தனர்.

# விடுதிகளில் கட்டணமில்லாமல் தங்கி படிக்க விண்ணப்பிக்கலாம்

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அறிவிப்பு

சென்னை, ஜூன் 14
தமிழ அரசின் ஆதிதிராவிடர்மற்றும்பழங்குடியினர்நலத்துறை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: 2025-2026 ஆம் கல்வியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பள்ளி / ஐடிஐ/டிப்ளோமா/கல்லூரி விடுதிகளில் கட்டணமில்லாமல் தங்கிப் பயில்வதற்கு ஆர்வமுள்ள மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இணையவழியில் 10.06.2025 முதல் பெறப்படுகிறது. ஆர்வமுள்ள மாணாக்கர்கள் https://nallosai.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி விண்ணப்பித்திடுமாறு தெரிவிக்கப்படுகிறது.



இந்த விடுதிகளில் தங்கிப்பயில்வதற்குமாணாக்கர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்துக்குள் இருக்க வேண்டும். மேலும், மாணாக்கர் மத்திய/மாநில அரசின் அங்கீகரிக்கப்பட்டகல்வி நிறுவனங்களில் தங்கிப்பயில வேண்டும்.


மாணாக்கர்கள் கூடுதல் தகவல்களுக்கு 18005997638 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணினை அலுவலக நேரத்தில் (காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லை: கொடுமுடியாறு நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் திறப்பு

நெல்லை, ஜூன் 14
நெல்லை மாவட்டம் கொடுமுடியாறு நீர்த்தேக்கத்தில் இருந்து நாளை தண்ணீர் திறந்துவிடப்பட உள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது;

"திருநெல்வேலி மாவட்டம், கொடுமுடியாறு நீர்த்தேக்கத்தின் கீழ் பாசனம் பெறும் வள்ளியூரான்கால், படலையார் கால் மற்றும் ஆத்துக் கால் ஆகியவற்றின் மூலம் பாசனம் பெறும் நேரடி மற்றும் மறைமுக பாசனபரப்பு 2548.94 ஏக்கர் நிலங்களுக்கு, கார் பருவ சாகுபடி செய்வதற்கு 13.06.2025 முதல் 10.10.2025 முடிய 120 நாட்களுக்கு, வினாடிக்கு 50 கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிடவும், நீர்த்தேக்கத்தில் இருந்து கூடுதல் நீர்வரத்து இருக்கும் பட்சத்தில், வடமலையான்கால் மூலம் பாசனம் பெறும் 3,231.97 ஏக்கர் நிலங்களுக்கு வினாடிக்கு 100 கன அடிக்கு மிகாமல் அரசு ஆணையிட்டுள்ளது.



இதனால் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் மற்றும் நான்குநேரி வட்டங்களில் உள்ள மகிழடி, நம்பித்தலைவன் பட்டயம், ஏர்வாடி, ராஜாக்கள் மங்கலம், வள்ளியூர், தளபதிசமுத்திரம் கிராமங்களில் உள்ள 5,780.91 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூ.1,000 கோடிக்கான பிணையப் பத்திரங்கள் ஏலம்

சென்னை, ஜூன் 14
நிதித்துறை முதன்மை செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 1000 கோடி மதிப்பில் 6 ஆண்டுகால பிணையப் பத்திரம் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் ஜீன் 17, 2025 அன்று நடத்தப்படும்.

போட்டி ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (EKuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) ஜீன் 17, 2025 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.



இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கழுத்தில் பாம்பை மாலையாக போட்டு சரக்கு வாங்க வந்த வாலிபர்

தர்மபுரி, ஜூன் 14
தர்மபுரி மாவட்டம், நான்குரோடு அருகே டாஸ்மாக் கடையில் நேற்று முன்தினம், வாலிபர் ஒருவர் கழுத்தில் செத்து போன பாம்பை மாலையாக சுற்றிக்கொண்டு சரக்கு வாங்க வந்தார்.

இதனால் அங்கிருந்தவர்கள் அலறி ஓட்டம் பிடித்தனர். அப்போது,



டாஸ்மாக் கடை விற்பனையாளர்கள், உடனடியாக அங்கிருந்து செல்லும்படி, அந்த வாலிபரிடம் மது பாட்டிலைகொடுத்துஅனுப்பி வைத்தனர். விசாரணையில், தர்மபுரி ராஜாபேட்டையை சேர்ந்த ஆட்டோ டிரைவரான சூர்யா (27) என்பது தெரியவந்தது. அவரை போலீசார் வலைவிரி தேடி வருகின்றனர்.

# சென்னை பெயின்டர் கொலையில் புகாரை பெறாத இன்ஸ்பெக்டர் 2 எஸ்ஐகள் அதிரடி சஸ்பெண்ட்

காட்டுமன்னார் கோவில், ஜூன் 14
பெயின்டர் கொலையில் புகாரை பெறாத இன்ஸ்பெக்டர், 2 எஸ்ஐகளைசஸ்பெண்ட்செய்து எஸ்பி அதிரடியாக உத்தரவிட்டுள்ளார். கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவிலை சேர்ந்த குமார் மகன் லெப்ட் (எ) பிரவீன்ராஜ் (23), சென்னையில் பெயின்டராக வேலை செய்து வந்தார். சில நாட்களுக்கு முன் தனது நண்பர் திருமணத்திற்கு சொந்த ஊருக்கு வந்தவர், சந்தை தோப்பு பகுதியில் பைக்கில் வேகமாக சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த மணிகண்டன் என்பவர் மீது மோதி உள்ளார்.

இதனால் மணிகண்டன் தரப்பினர் வாகனம்



சேதம் அடைந்ததற்கு நஷ்டஈடு கேட்டுள்ளனர். அப்போது இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் மணிகண்டன் மற்றும் அவரது நண்பர்களான சிவராஜ், செந்தில் குமார் ஆகியோரை பிரவீன்ராஜ் தாக்கி கத்தியால் கிழித்துள்ளனர். அதில் மணிகண்டன்தரப்பினர்காவல் நிலையத்தில் கடந்த 6ம் தேதி பிரவீன்ராஜ் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் அளிக்க சென்றனர். அப்போது பணியில் இருந்த இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் மற்றும் எஸ்ஐகள் புகாரை பெறாமல் அலட்சியமாக செயல்பட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மதியம் பிரவீன்ராஜ் அவரது தெரு அருகில் மது அருந்தி உள்ளார். அப்போது அதே பகுதியில் மறைந்திருந்த மணிகண்டன் தரப்பினர் 7 பேர் கொண்ட கும்பல் பிரவீன்ராஜை கத்தியால் வெட்டியும் கம்பிகளை கொண்டு தலை, கழுத்து, கால் பகுதியிலும் தாக்கி உள்ளனர். இதனால் பிரவீன்ராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதையடுத்து மணிகண்டன்(21) உள்பட 5 பேரை போலீசார் கைது செய்தனர். 2 பேரை தேடி வருகின்றனர்.

இந்த சம்பவத்தில் ரத்த காயமடைந்து பாதிக்கப்பட்டவர்கள் புகார் கொடுக்க வந்தநிலையில் புகாரின் மீது நடவடிக்கை எடுக்காத காட்டுமன்னார்கோவில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம், தனிப்பிரிவு சப் இன்ஸ்பெக்டர்கள் ராஜா, அன்பழகன் ஆகியோரை சஸ்பெண்ட் செய்து எஸ்பி ஜெயகுமார் அதிரடியாக உத்தரவிட்டார்.

# கொடும்பாளூர் அகழ்வாராய்ச்சி பணியை நிறுத்தியது ஒன்றிய அரசு



விராலிமலை, ஜூன் 14
கொடும்பாளூர் அகழ்வாராய்ச்சி பணியை ஒன்றிய அரசு தொல்லியல் துறை திடீரென்று நிறுத்தி வைத்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அடுத்துள்ளது கொடும்பாளூர், பல வேறு வரலாற்று சின்னங்கள் புதைந்துள்ள பகுதி. ஏறத்தாழ 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவான புராதன நகரம் என்று வரலாற்று ஆய்வாளர்களும், கல்வெட்டு ஆய்வுகளும் கூறுகின்றன. கொடும்பாளூரில் குடியிருப்புகள் அமைந்துள்ள அக்ரஹாரம் மேட்டுப்பகுதி காலி இடங்களில் ஒன்றிய தொல்லியல் துறையின் திருச்சி வட்ட பிரிவு சார்பில் அகழாய்வு பணி கடந்த ஜனவரி 12ம் தேதி தொடங்கப்பட்டது.

இங்கு அகழாய்வில் புதைந்த விடுகளுக்கு அடையாளமாக நான்கு அடியில் செங்கல் கற்களினால் எழுப்பப்பட்ட மேல் சுவர் அதன் அடியில் மண்ணாலான சுவரும் முதல் கட்டமாக வெளிப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அக்காலத்தில் நெசவு தொழிலுக்கு பயன்படுத்திய தக்களி, கொண்டை வடிவில் ஊசி, வட்டக்கல், கூர் வடிவிலான எழும்புகள் கிடைத்தன. தொடர்ந்து நடைபெற்று வந்த அகழாய்வில் பண்டையகால தங்கத்தில் செய்யப்பட்ட குண்டுமணி, அழகிய வடிவிலான மூடப்பட்ட மண்பானை, வட்டக்கல், கிடைத்திருந்தது.

தொடர்ந்து நடைபெற்று வந்த அகழாய்வு பணியில் புதைந்து கிடக்கும்வரலாற்றுசின்னங்கள் வெளிவருவதற்கு வாய்ப்புள்ளதாக கருதப்பட்டிருந்த நிலையில் ஒன்றிய தொல்லியல் துறை பணிகளை 25 நாட்கள் நிறுத்தியுள்ளது. மேலும் தற்போது குழிகள் மீது தார்ப்பாய் போட்டு மூடி வைத்துள்ளது. பணிகள் மேற்கொள்ள ஒன்றிய அரசு போதிய நிதி ஒதுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

அகழ்வாராய்ச்சி இயக்குநராக பணியில் இருந்த அனில் குமார் என்பவரை திடீரென்று இடமாற்றம் செய்து ஒன்றிய அரசு உத்தரவிட்டது. வரலாற்று சின்னங்கள் வெளிவரத் தொடங்கிய வேளையில் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது. தமிழர்களின் பாரம்பரிய வரலாறு வெளிவருவதில் விருப்பம் இல்லாமல் ஒன்றிய அரசு செயல்படுகிறதோ என்று வரலாற்று ஆர்வலர்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

# சென்னையில் 21 இன்ஸ்பெக்டர்கள் பணியிட மாற்றம்: போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவு

சென்னை, ஜூன் 14
சென்னை மாநகர காவல்துறையில் 21 இன்ஸ்பெக்டர்களை பணியிடமாற்றம் செய்து போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து, சென்னை மாநகர போலீஸ் கமிஷனர்அருண்பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: சென்னை நுண்ணறிவுப் பிரிவு இன்ஸ்பெக்டராக இருந்த உஷாராணி மத்திய குற்றப்பிரிவுக்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த சேகர் சிங் புதிய வண்ணாரப் பேட்டை சட்டம் ஒழுங்கிற்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த தாமஸ் பேசின்பாலம் சட்டம் ஒழுங்கிற்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த தீபக்குமார் திருமங்கலம் சட்டம் ஒழுங்கிற்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த வராணி மத்திய குற்றப்பிரிவுக்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த லோகநாதன் யானைகவுனி சட்டம் ஒழுங்குக்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த சரவணன் துறைமுகம் குற்றப்பிரிவுக்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த வனிதா விருகம்பாக்கம் சட்டம் ஒழுங்குக்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த விஜயலட்சுமிஸ்டான்லி அரசு மருத்துவமனை சட்டம் ஒழுங்குக்கும், புதியவண்ணாரப்பேட்டை சட்டம் ஒழுங்கில் இருந்த கிருஷ்ணராஜ் நந்தம்பாக்கம் குற்றப்பிரிவுக்கும், தலைமை செயலக காலனி குற்றப்பிரிவில் இருந்த ஹரிஹரசுதன் மத்திய குற்றப்பிரிவுக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



கோயம்பேடு குற்றப்பிரிவில் இருந்த உமா மகேஸ்வரி மத்திய குற்றப்பிரிவுக்கும், கோயம்பேடு குற்றப்பிரிவில் இருந்த கோமதி மத்திய குற்றப்பிரிவுக்கும், மீனம்பாக்கம் குற்றப்பிரிவில் இருந்த மங்களலட்சுமி மத்திய குற்றப்பிரிவுக்கும், சென்னை பாதுகாப்பு பிரிவில் இருந்த சிதம்பரபாரதி நொளம்பூர் சட்டம் ஒழுங்கிற்கும், சென்னை பாதுகாப்பு பிரிவில் இருந்த முத்தேவு மத்திய குற்றப்பிரிவுக்கும், மத்திய குற்றப்பிரிவில் இருந்த ஹேமாவதி சென்னைபாதுகாப்பு பிரிவுக்கும், திருமங்கலம் சட்டம் ஒழுங்கில் இருந்த சுப்புலட்சுமி திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கும், பேசின் பாலம் சட்டம் ஒழுங்கில் இருந்த சிவகுமார்சென்னைபாதுகாப்பு பிரிவுக்கும், யானைகவுனி சட்டம் ஒழுங்கில் இருந்த சரவணன் செம்பியம் குற்றப்பிரிவுக்கும், நீலாங்கரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்த ராஜேஸ்வரி மத்திய குற்றப்பிரிவுக்கும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# கோயம்பேடு சாலை விரிவாக்க பணிக்கு நிலம் கையகப்படுத்திய விவகாரம் ஐஏஎஸ் அதிகாரி அன்சுல் மிஸ்ராவுக்கு விதித்த சிறை தண்டனை நிறுத்திவைப்பு: மேல்முறையீடு வழக்கில் உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவு

சென்னை, ஜூன் 14
நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஐ.ஏ.எஸ். அதிகாரி அன்சுல்மிஸ்ராவுக்கு விதிக்கப்பட்ட ஒரு மாத சிறை தண்டனையை நிறுத்திவைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டில் சாலை விரிவாக்கத்துக்காக கையகப்படுத்தப்பட்ட 6.5 சென்ட் நிலத்தை உரிய காரணத்திற்கு பயன்படுத்தாததால் அதை திருப்பித் தரக்கோரி அளித்த மனுவை பரிசீலிக்க வேண்டும் என்று நில உரிமையாளர்கள் லலிதாம்பாள்மற்றும்விஸ்வநாதன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், மனுதாரர்களை நேரில் அழைத்து விசாரித்து, 2 மாதங்களில் சட்டப்படி தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்துக்கு 2023ம் ஆண்டு உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையில், நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தவில்லை எனக் கூறி சென்னை பெருநகர வளர்ச்சி குழும அப்போதைய உறுப்பினர்செயலர் அன்சுல் மிஸ்ராவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி,



சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் அப்போதைய உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ராவுக்கு ஒரு மாத சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டார். இதனைஎதிர்த்து அன்சுல் மிஸ்ரா தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு நீதிபதிகள் எம்.எஸ். ரமேஷ், வி.லட்சுமி நாராயணன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஐஏஎஸ் அதிகாரி அன்சுல் மிஸ்ராவுக்கு விதிக்கப்பட்ட சிறைதண்டனையை நிறுத்தி வைத்து உத்தரவிட்டு, 25,000 ரூபாயை அன்சுல் மிஸ்ரா மூன்று வாரங்களில் டெபாசிட் செய்யுமாறு உத்தரவிட்டனர். மேலும், மேல்முறையீட்டு மனு குறித்து பதிலளிக்குமாறு வழக்கு தொடர்ந்தவர்களுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை ஜூலை 21ம் தேதிக்குதள்ளிவைத்தனர்.

# அரசு உதவி வழக்கு நடத்துநர் பதவி தேர்வர்கள் முழுமையான சான்றிதழ் பதிவேற்றம் செய்ய கால அவகாசம்: டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு

சென்னை, ஜூன் 14
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் அ.ஜான் லூயிஸ் வெளியிட்ட அறிவிப்பு: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அரசு உதவி வழக்கு நடத்துநர்(கிரேடு 2) பதவிக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கு முதன்மை எழுத்து தேர்விற்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்கள் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன. சரிபார்ப்பிற்கு பின்னர் சில சான்றிதழ்கள் ஆவணங்கள் முழுமையாக சரியாக பதிவேற்றம் செய்யப்படாமல் குறை




பாட்டுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, இத்தகைய தேர்வர்கள் வருகிற 16ம் தேதி வரை(இரவு 11.59 மணிக்குள்) விடுபட்ட மற்றும் முழுமையான சான்றிதழ்களை ஆவணங்களைப் பதிவேற்றம், மீள் பதிவேற்றம் செய்ய இறுதி வாய்ப்பு வழங்கப்படுகிறது.


மேற்படி தேர்வர்களின் பதிவெண்களைக் கொண்ட இரண்டாவது பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான குறிப்பாணை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவல் அத்தேர்வர்களுக்கு குறுஞ்செய்தி மின்னஞ்சல் மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அத்தேர்வர்கள் அனைவரும் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களை ஆவணங்களை தேர்வாணைய இணையதளத்தில் ஒருமுறை பதிவின் வாயிலாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு செய்ய தவறும் பட்சத்தில், அத்தகைய தேர்வர்களின் உரிமை கோரல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

14.6.2025

## மேட்டூர் அணை திறக்கப்பட்ட பிறகும் குறுவைத் தொகுப்பு அறிவிக்காதது ஏன்? அன்புமணி ராமதாஸ் கேள்வி



சென்னை. ஜூன் 14

பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், குறுவை சாகுபடிக்கான குறுவைத் தொகுப்புத் திட்டம் இன்று வரை அறிவிக்கப்படவில்லை; நெல்லுக்கு முதலமைச்சர் அறிவித்துள்ள கொள்முதல் விலையும் உழவர்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. உழவர்களின் நலனுக்காக எதையும் செய்யாமல் துரோகம் செய்வதை மட்டுமே தமிழக அரசு தொழிலாகக் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது.

அதற்குத் தேவையான விதை, உரங்கள், நுண்ணூட்டச் சத்துகள் போன்றவற்றை மானிய விலையில் வழங்குவது தான் குறுவைத் தொகுப்பு திட்டமாகும். அதனால், அந்தத் திட்டத்தை குறைந்தது இரு வாரங்களுக்கு முன்பாவது அறிவித்திருக்க வேண்டும். ஆனால், மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்பட்ட பிறகும் கூட அத்திட்டத்தை அறிவிக்காதது உழவர் நலனில் திமுக அரசுக்கு அக்கறை இல்லாததையே காட்டுகிறது.

அதேபோல், சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ரூ.2500, சன்னரக நெல்லுக்கு குவிண்டால் ரூ.2,545 வீதம் கொள்முதல் விலை உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்திருக்கும் முதல்அமைச்சர், அதைஏதோ தமது அரசின் சாதனை போல கூறியிருக்கிறார்.


நெல்லுக்கு தமிழக அரசு வழக்கமாக வழங்கி வரும் கொள்முதல் விலையை முறையே ரூ.26 வீதமும், ரூ.36 வீதமும் தமிழக அரசு உயர்த்தியிருக்கிறது. இது ஒன்றும் சாதனையல்ல.

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ.2369 ஆகவும் சன்னரக நெல்லுக்கான ஆதரவு விலையை ரூ.2389 ஆகவும் மத்திய அரசு உயர்த்தியிருக்கிறது. இது போதுமானதல்ல.

இதனால் பாதிக்கப்படும் உழவர்களின் துயரைத் துடைக்கும் வகையில் மத்திய அரசிடம் பேசி கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.2,700 வீதம் உயர்த்தச் செய்ய வேண்டும்; மாநில அரசு அதன் பங்காக ரூ.800 ஊக்கத் தொகை வழங்குவதன் மூலம் குவிண்டாலுக்கு ரூ.3500 கிடைக்கும் வகை செய்ய வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் கோரிக்கை ஆகும்.

பாரதிய ஜனதா ஆட்சி நடக்கும் ஒடிசாவில் குவிண்டாலுக்கு ரூ.800 வீதமும், காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் தெலங்கானாவில் குவிண்டாலுக்கு ரூ.500 வீதமும் ஊக்கத்தொகை வழங்கப்படும் நிலையில் தமிழக அரசு அதன் ஊக்கத்தொகையை ரூ.800 ஆக உயர்த்துவது சாத்தியமற்றதல்ல. ஆனால், அவ்வாறு செய்ய தமிழக ஆட்சியாளர்களுக்கு மனம் தான் வரவில்லை. உழவர்களின் நலன்களை பாதுகாப்பதற்காகவே அவதாரம் எடுத்திருப்பதாகக் கூறும் தமிழக அரசு, அது உண்மை என்றால் நெல்லுக்கான கொள்முதல் விலைக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகையை ரூ.800 ஆக உயர்த்த வேண்டும். அதுமட்டுமின்றி, வழக்கமான பொருள்களுடன் ஏக்கருக்கு ரூ.5,000 வீதம் ஊக்குவிப்பு மானியமும் சேர்த்து குறுவைத் தொகுப்பை வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## முகத்தில் கட்டப்பட்ட பாலித்தீன் பை.. விஷவாயு செலுத்தி மாணவர் தற்கொலை காரணம் என்ன..?



சிதம்பரம், ஜூன் 14

கடலூர் மாவட்டம் புவனகிரி தாலுகா ஆனையங்குப்பம் பகுதியை சேர்ந்தவர் ராஜகோபால். இவர் சம்பந்தம் கிராமத்தில் டீக்கடை நடத்தி வருகிறார். இவருடைய மகன் சந்திரயோகேஷ் (17).

இவர்சிதம்பரம்அருகேகிழமூங்கிலடி கிராமத்தில் உள்ள தனியார் பள்ளியில் பிளஸ்2 படித்து வந்தார். நேற்று முன்தினம்இரவுவீட்டுமாடியில்உள்ளஅறையில்தூங்குவதற்காக சந்திரயோகேஷ் சென்றார். நேற்று காலை 7 மணியாகியும் அவர் எழுந்து வரவில்லை. இதனால் ராஜகோபால் தனது மகனை எழுப்புவதற்காக, அவரது அறைக்கு சென்றார். அங்கு சந்திரயோகேஷ் முகத்தில் பாலித்தீன் பை கட்டப்பட்ட நிலையில் பிணமாக கிடந்தார். இதை பார்த்ததும் அதிர்ச்சியடைந்த அவர், கதறி அழுதார்.

இதனிடையே சம்பவம் பற்றி அறிந்த பரங்கிப்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெர்மன் லதா தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டனர்.

அதில், சந்திரயோகேஷ் தனது முகத்தில் பாலித்தீன் பையால் தானாகவே கட்டி டேப் ஒட்டிக்கொண்டு, விஷ தன்மை கொண்ட 'ஸ்பிரே பாட்டில்' மூலமாக வாயுவை செலுத்தி தற்கொலை செய்து கொண்டுள்ளது தெரியவந்தது. விஷவாயுவை பாலித்தீன் பை உள்ளே மட்டுமின்றி அவர் இருந்த அறை முழுவதும் அடித்து இருந்து இருக்கிறார். இதையடுத்து, இறந்து கிடந்த மாணவன் சந்திரயோகேஷ் உடலை போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பரங்கிப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, சந்திரயோகேஷ் இதுபோன்று கொடூரமான முறையில் தற்கொலை செய்து கொள்வதற்கான காரணம் என்ன? என்பது பற்றி தீவிரமாக விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் சி.பி.எஸ்.இ. பாடம் கஷ்டமாக இருந்ததால் பள்ளிக்கு செல்ல விருப்பம் இல்லை என மாணவர் கூறியதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனிடையே தற்கொலை செய்வதற்கு முன்பு செல்போனில் உள்ள ஆதாரங்கள் அழிக்கப்பட்டது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இன்றைய ராசி பலன்கள் (14.6.2025)

மேஷம்: உழைப்பிற்கு TODAY நல்ல பரிசு கிடைக்கும். வேலை வாய்ப்பு தேடுவோருக்கு சிறந்த வாய்ப்பு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

ரிஷபம்: நிதி நிலை சீராகும். பழைய கடன்கள் தீர்க்கப்படும். வீட்டில் சில சின்ன சிக்கல்கள் இருந்தாலும் நீடிக்காது.

மிதுனம்: புதிய முயற்சியில் வெற்றி. வியாபாரத்தில் லாபம். பழைய நண்பரிடமிருந்து நல்ல செய்தி வரும்.

கடகம்: உடல் ஆரோக்கியத்தில் சிறு கவலை. மன அழுத்தம் இருக்கும். ஆனாலும் குடும்ப ஆதரவு கிடைக்கும்.

சிம்மம்: வாழ்க்கையில் முன்னேற்றம். அலுவலகத்தில் உங்கள் கருத்து மதிக்கப்படும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும்.

கன்னி: அறிவுக் கூர்மை அதிகரிக்கும். போட்டிப் பரீட்சை எழுதுபவர்களுக்கு சாதகமான நாள். உணவில் கவனம் தேவை.

துலாம்: வீட்டு வேலைகளில் பிஸியாக இருப்பீர்கள். உறவுகளில் அன்பும் பாசமும் அதிகரிக்கும். வீண் சண்டைகளை தவிர்க்கவும்.

விருச்சிகம்: சிறந்த வாய்ப்பு காத்திருக்கிறது. தொழிலில் லாபம். பழைய சிக்கல்கள் தீரும். நண்பர்களுடன் சந்தோஷமான சந்திப்பு.


தனுசு: புதிய திட்டங்களை தொடங்க நல்ல நேரம். மனைவி/கணவருடன் நேரம் செலவிடுவதால் உறவு மேம்படும்.

மகரம்: செயல்களில் சீரும் சுகமும் இருக்கும். நிலம் தொடர்பான விஷயங்களில் சாதகமான தீர்வு. பண வரவு உயரும்.

கும்பம்: சிறு சிக்கல்கள் இருந்தாலும், நீங்கள் புத்திசாலித்தனமாக தீர்வுகளை காண்பீர்கள். நண்பர்களிடம் உதவி கிடைக்கும்.

மீனம்: இனிமையான நாள். கல்யாணம் தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம். பயணம் ஒருவேளை ஏற்படலாம்.

## சென்னை போரூர் அருகே மெட்ரோ ரெயில் கட்டுமானத்தில் விபத்து: ஒருவர் பலி



சென்னை, ஜூன் 14

சென்னையை அடுத்த பூந்தமல்லியில் இருந்து பரங்கிமலை வரை மெட்ரோ ரெயில் கட்டுமான பணிகள் நடந்து வருகிறது. போரூரில் இருந்துநந்தம்பாக்கம் பகுதி வரை ரெயில்வே பாலத்தின் கீழ் 30 அடி உயரத்தில் வாகனங்கள் செல்லும் வகையில் பாலம் அமைக்கும் பணியும் நடந்து வருகிறது. இதற்காக 2 தூண்களுக்கு மத்தியில் ராட்சத 'கர்டர்' அமைக்கப்பட்டன. இந்த நிலையில் சுமார் 40 அடி நீளமுள்ள ராட்சத 'கர்டர்' நேற்று இரவு திடீரென சரிந்து கீழே மவுண்ட் பூந்தமல்லி சாலையில் விழுந்தது.

அப்போது பரங்கிமலையில் இருந்து போரூர் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற சுமார் 35 வயது மதிக்கத்தக்க வாலிபர் மீது விழுந்தது. ராட்சத 'கர்டர்' அடியில் சிக்கிய அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

இதனால் அந்த பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இது குறித்து தகவல் அறிந்ததும் நந்தம்பாக்கம் போலீசார், பரங்கிமலை போக்குவரத்து போலீசார், மெட்ரோ ரெயில்வே பணி அதிகாரிகள் விரைந்து வந்து சாலை முழுவதும் வாகனங்கள் செல்ல முடியாத வகையில் தடுப்புகள் அமைத்தனர்.

மேலும் கீழே விழுந்த 2 ராட்சத 'கர்டர்'களை ராட்சத கிரேன் மூலம் அகற்றும் பணிகள் நடக்கிறது. இதன் பின்னர் தான் பாலத்தின் அடியில் சிக்கியவரின் உடல் மீட்கப்படும். அதன் பிறகே அவர் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பது தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## தேனியில் சோகம்: தந்தை மகன் பரிதாப பலி

தேனி, ஜூன் 14

தேனி மாவட்டம், கம்பம் கிருஷ்ணாபுரத்தை சேர்ந்தவர் முபாரக் அலி (68). இவரது மகன் முகமது இர்பான் (24). இவர், கடந்த 6 ஆம் தேதி சுப்பிரமணி கோவில் தெருவிலுள்ள உறவினர் வீட்டின் அருகே புதிதாக கட்டப்பட்ட வீட்டின் மேல் தளத்துக்கு சென்றார். அப்போது, அங்கிருந்த மரக் கட்டை ஒன்றை தூக்கியபோது மின் கம்பியில் பட்டு தூக்கிவீசப்பட்டதில் பலத்த காயமடைந்தார்.

இவர் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதை அறிந்த அவரது தந்தை முபாரக் அலி அதிர்ச்சியில் செவ்வாய்க்கிழமை காலை உயிரிழந்தார். இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை இரவு மகன் முகமது இர்பான் உயிரிழந்தார்.

இளைஞரும், அவரது தந்தையும் உயிரிழந்ததால் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, உறவினர்கள் கம்பம் வடக்கு காவல் நிலையத்தை முற்றுகையிட முயன்றனர். அப்போது, போலீசார் உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறி சமாதானம் செய்ததை அடுத்து உறவினர்கள் திரும்பிச் சென்றனர். இது குறித்து கம்பம் வடக்கு போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நியாய விலை கடை விற்பனையாளர் காலி பணியிடங்களுக்கு நேர்முக தேர்வு

கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் நேற்று வெளியிட்டு அறிவிப்பு: சென்னை மாவட்டத்தில் செயல்படும் நியாய விலை கடைகளில் உள்ள விற்பனையாளர்கள் காலி பணியிடங்களை நிரப்புவதற்கு, சென்னை மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளம் வழி விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு 11.6.2025 முதல் 14.7.2025 முடிய மாதவரம் பால்பண்ணை காலனி, விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்தில் நேர்முக தேர்வு நடந்து வருகிறது. இணையவழி விண்ணப்பித்துள்ளோர் www.drbchn.in என்ற இணையதள முகவரியில் தங்களது நேர்முக தேர்வு அனுமதி சீட்டை பதிவிறக்கம் செய்து தங்களுக்கு குறிப்பிட்டுள்ள நாளில் நேர்முக தேர்வில் கலந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## "துருவ நட்சத்திரம்" வெளியீட்டிற்கு பிறகே அடுத்த படம் கவுதம் மேனன்

விக்ரம் நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படம் 'துருவ நட்சத்திரம்'. இந்த படத்தை கவுதம் மேனன் இயக்கியுள்ளார். கதாநாயகியாக ரீத்துவர்மா நடித்திருக்கிறார். இவர்களுடன் பார்த்திபன், ராதிகா சரத்குமார், சிம்ரன், விநாயகன், ரீத்து வர்மாஉள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ளார்.

2017ம் ஆண்டில் தொடங்கப்பட்ட 'துருவ நட்சத்திரம்', நிதி பிரச்னை உள்பட பல பிரச்னைகளால் நீண்ட காலமாக வெளிவராமல் தள்ளிப்போனது. 2023ல் நவம்பர் மாதம் 'துருவ நட்சத்திரம்' வெளியிடப்படவிருந்த நிலையில், படம் வெளியிடுவது தள்ளிப்போவதாக வெளியீட்டுக்கு முந்தைய நாளில் இயக்குநர் கவுதம் மேனன் அறிவித்தார். அதன் பிறகு ரிலீஸ் தேதி குறித்த எந்த ஒரு அப்டேட்டையும் படக்குழுவினர் தெரிவிக்கவில்லை. சூர்யாவை வைத்து 'துருவ நட்சத்திரம்' படத்தை 2010ம் ஆண்டு துவங்கினார் கவுதம் மேனன் . ஆனால் கதையில் உடன்பாடு இல்லாத காரணத்தால் இப்படத்தில் இருந்து சூர்யா விலகினார்.

சமீபத்தில் நடந்த நேர்காணல் ஒன்றில் கவுதம் மேனன் துருவ நட்சத்திரம் குறித்து அப்டேட் கொடுத்துள்ளார் அதில் "துருவ நடசத்திரம் திரைப்படம் வெளியீட்டிற்கு பிறகு தான் நான் மற்ற வேலைகளை தொடங்க போகிறேன். நான்அடுத்துஎந்தபடத்திலும்நடிக்கஒப்புக்கொள்ளவில்லை.திரைப்படத்தைமுதலீட்டாளர்களிடம்காண்பித்தோம் அவர்களுக்கு பிடித்துள்ளது. படத்தின் மீதுள்ள சட்ட சிக்கல்களை தீர்த்து வருகிறோம். ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் கண்டிப்பாக திரைப்படம் வெளியாகும்." என கூறியுள்ளார்.

## பிசாசு 2 படத்தின் அப்டேட் கொடுத்த மிஷ்கின்

கடந்த 2014ம் ஆண்டு மிஷ்கின் இயக்கத்தில் வெளியான திரைப்படம் 'பிசாசு'. அந்த படத்துக்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து, தற்போது 'பிசாசு' படத்தின் இரண்டாம் பாகத்தை மிஷ்கின் இயக்கி உள்ளார். நடிகை ஆண்ட்ரியா முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ள இந்த படத்தில், நடிகர் விஜய் சேதுபதி, கவுரவ வேடத்தில் நடித்துள்ளார். மேலும் இந்த படத்தில் பூர்ணா, சந்தோஷ் பிரதாப், நமிதா கிருஷ்ணமூர்த்தி, அஜ்மல் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ராக்போர்ட் என்டர்டெயின்மென்ட் சார்பில் முருகானந்தம் தயாரிக்கும் இந்த படத்திற்கு கார்த்திக் ராஜா இசையமைத்துள்ளார். சில மாதங்களுக்கு முன்பு வெளியான இந்த படத்தின் டீசர் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. மேலும் இந்த திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது. தயாரிப்பு தரப்பில் ஏற்பட்ட பிரச்னை காரணமாகவே திரைக்கு வருவதில் தாமதமாகி வருகிறது. வழக்கு காரணமாக மூன்று ஆண்டுகளாக இப்படம் வெளியாகாமல் இருக்கிறது. இந்த நிலையில், நேர்காணலில் பங்கேற்ற மிஷ்கின், "பிசாசு 2 திரைப்படத்தில் ஆண்ட்ரியா மிகச்சிறந்த நடிப்பைக் கொடுத்துள்ளார். அவரின் உழைப்புக்காக இப்படம் திரைக்கு வர வேண்டும். படத் தயாரிப்பாளர்கள் அதற்கான முயற்சியில்தான் இருக்கின்றனர். என் இயக்கத்தில் உருவான டிரெயின் திரைக்கு வந்தபின் பிசாசு 2 வெளியாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

## சூர்யா பட அப்டேட் கொடுத்த சாய் அபயங்கர்



தமிழ் சினிமாவில் நானும் ரௌடி தான் படத்தின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் ஆர்.ஜே. பாலாஜி. அதைத் தொடர்ந்து இவர் எல்கேஜி, வீட்ல விசேஷம், ரன் பேபி ரன், சிங்கப்பூர் சலூன், சொர்க்கவாசல் ஆகிய படங்களில் ஹீரோவாக நடித்திருக்கிறார். நயன்தாரா நடிப்பில் மூக்குத்தி அம்மன் எனும் திரைப்படத்தை இயக்கியுள்ளார். தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் சூர்யா. தற்போது ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் தனது 45வது படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்திற்கு தற்காலிகமாக 'சூர்யா 45' என்று பெயரிடப்பட்டுள்ளது. டிரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார். இந்த படத்தில் சூர்யாவுடன் முக்கிய கதாபாத்திரத்தில் திரிஷா நடிக்கிறார்.மேலும், சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகா மாயா ரவி மற்றும் நட்டி நட்ராஜ் ஆகியோர்நடித்து வருகின்றனர். இப்படத்தில் சூர்யா 2 வேடங்களில் நடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே சூர்யா, வக்கீல் வேடத்தில் நடிப்பதாக கூறப்படும்நிலையில், தற்போது மற்றொரு வேடத்தில் நடிப்பதாக புதியதகவல்வெளியாகிஇருக்கிறது.நீதிமன்றவழக்கைமையமாகவைத்துபடத்தின்கதைஉருவாகப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சமீபத்தில் 'சூர்யா 45' படத்திற்கான இசைப் பணியில் சாய் அபயங்கர் இயக்குனர் ஆர்.ஜே. பாலாஜியுடன் ஈடுபட்டு வரும் புகைப்படத்தை வெளியிட்டார். இந்த படத்தின் மீதான எதிர்பார்ப்பு மிகப்பெரிய அளவில் இருக்கும் நிலையில் படத்தின் படப்பிடிப்புகளும் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. அதன்படி கிட்டத்தட்ட இந்த படமானது இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது. தற்போது கிளைமாக்ஸ் காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன. நடிகை திரிஷா, இப்படத்தில் தனது போர்ஷன்களை முடித்துவிட்டார் என்றும் தகவல் வெளியானது. ஏற்கனவே இந்த படத்திற்கு 'வேட்டை கருப்பு' என்று தலைப்பு வைக்கப்பட்டிருப்பதாக சமூக வலைதளங்களில் தகவல்கள் பரவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சமீபத்திய பேட்டியில் சாய் அபியங்கர் "சூர்யா 45 படத்தின் இசையமைக்கும் பணிகள் சூப்பராக போய்க்கொண்டிருக்கிறது. சூர்யா சாரை சின்ன வயதிலிருந்தே பார்த்துக் கொண்டிருக்கிறேன். இது ஒரு பேன் பாய் சம்பவமாக இருக்கும். ஏ. ஆர்.ரகுமான், அனிருத்துடன் நான் முன்பு வேலை செய்திருப்பதால் எனக்கு பிஜிஎம் பண்றது மிகவும் பிடிக்கும்" என்று தெரிவித்திருந்தார். இந்நிலையில் சாய் அபியங்கர் சூர்யா 45 படம் குறித்து அப்டேட் கொடுத்துள்ளார். சூர்யா 45 படத்தின் டீசர் சில நாட்களில் வெளியாக உள்ளதாக தனது டிவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளார். தீபாவளி வெளியீடாக திரைக்கு வர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி: தென் ஆப்பிரிக்காவுக்கு 282 ரன்கள் இலக்கு

நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா தென்ஆப்பிரிக்கா அணிகள் இடையிலான 3வது உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி லண்டன் லார்ட்சில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 212 ரன்னில் ஆல்அவுட் ஆனது. ஸ்டீவன் சுமித், வெப்ஸ்டர் அரைசதம் அடித்தனர்.


பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய தென்ஆப்பிரிக்கா தொடக்க நாளில் 4 விக்கெட்டுக்கு 43 ரன்களுடன் ஊசலாடியது. கேப்டன் பவுமா (3 ரன்), டேவிட் பெடிங்ஹாம் (8 ரன்) களத்தில் இருந்தனர்.

2வது நாளான நேற்று தென்ஆப்பிரிக்கா தொடர்ந்து பேட்டிங் செய்தது. ஆஸ்திரேலியாவின் ஆக்ரோஷமான பந்து வீச்சு தாக்குதலை தென்ஆப்பிரிக்க பேட்டர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் எதிர்கொண்டனர். நிறைய பந்துகளை தொடவே இல்லை. இதனால் முதல் ஒரு மணி நேரம் விக்கெட் விழாமல் சமாளித்தனர். ஸ்கோர் 94 ஆக உயர்ந்த போது பவுமா (36 ரன், 84 பந்து, 4 பவுண்டரி, ஒரு சிக்சர்) கம்மின்ஸ் பந்து வீச்சில் 'கவர்' திசையில் நின்ற லபுஸ்சேனிடம் சிக்கினார்.

இதைத் தொடர்ந்து பெடிங்ஹாம் ஒரு பக்கம் போராட இன்னொரு பக்கம் விக்கெட்டுகள் மளமளவென சரிந்தன. கம்மின்ஸ், அவர்களின் பேட்டிங் வரிசையை முற்றிலும் உருக்குலைத்தார். கைல் வெரைன் (13 ரன்), மார்கோ யான்சென் (0), கேஷவ் மகராஜ் (7 ரன்) சீக்கிரம் நடையை கட்டினர். பெடிங்ஹாம் தனது பங்குக்கு 45 ரன்கள் (111 பந்து, 6 பவுண்டரி) எடுத்தார். முடிவில் தென்ஆப்பிரிக்க அணி முதல் இன்னிங்சில் 57.1 ஓவர்களில் 138 ரன்னில் அடங்கியது. ஆஸ்திரேலிய தரப்பில் கேப்டன் கம்மின்ஸ் 6 விக்கெட்டுகளை அறுவடை செய்தார். லார்ட்ஸ் மைதானத்தில் ஒரு கேப்டனின் மகத்தான பந்து வீச்சாக இது பதிவானது. மிட்செல் ஸ்டார்க் 2 விக்கெட்டும், ஹேசில்வுட் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

அடுத்து 74 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை ஆடிய ஆஸ்திரேலியாவும் பேட்டிங்கில் சொதப்பியது. முதல் இன்னிங்சில் டக்அவுட் ஆன கவாஜா 2வது இன்னிங்சிலும் சோபிக்கவில்லை. 6 ரன்னில், ரபடாவின் வேகத்துக்கு இரையானார். அதே ஓவரில் கேமரூன் கிரீனும் (0) வீழ்ந்தார். எதிர்பார்க்கப்பட்ட மார்னஸ் லபுஸ்சேன் (22 ரன்), ஸ்டீவன் சுமித் (13 ரன்) அதிக நேரம் நிலைக்கவில்லை. ஆடுகளத்தில் பந்து சரமாரியாக 'ஸ்விங்' ஆனதால் அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் விக்கெட்டுகளை துரிதமாக தாரை வார்த்தனர். டிராவிஸ் ஹெட் (9 ரன்), வெப்ஸ்டர் (9 ரன்), கம்மின்ஸ் (6 ரன்) உள்ளிட்டோர் ஒற்றை இலக்கத்தை தாண்டவில்லை. அப்போது ஆஸ்திரேலியா 7 விக்கெட்டுக்கு 73 ரன்களுடன் மோசமான நிலையில் தவித்தது.

இந்த நெருக்கடியான சூழலில் களம் கண்ட விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேரி கணிசமாக ரன் எடுத்து ஒரு வழியாக ஆஸ்திரேலியாவை மூன்று இலக்கத்தை தொட வைத்தார். அலெக்ஸ் கேரி 43 ரன்களில் (50 பந்து, 5 பவுண்டரி) எல்.பி. டபிள்யூ. ஆனார். ஆட்ட நேர முடிவில் ஆஸ்திரேலிய அணி 2வது இன்னிங்சில் 40 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 144 ரன்கள் சேர்த்து மொத்தம் 218 ரன்கள் முன்னிலை பெற்றது. தொடர்ந்து 3வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. மிட்செல் ஸ்டார்க் (16 ரன்), நாதன் லயன் (1 ரன்) இருவரும் இன்று தொடர்ந்து பேட்டிங் செய்தனர். விரைவில் ஆல் அவுட் ஆகிவிடும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஸ்டார்க் பொறுப்புடன் செயல்பட்டு ரன்களை திரட்டினார். அவர் 136 பந்துகளில் 58 ரன்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இறுதியில் ஆஸ்திரேலிய அணி 65 ஓவர்களில் 207 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. ஸ்டார்க் ஹேசல்வுட் ஜோடி கடைசி விக்கெட்டுக்கு 59 ரன்கள் சேர்த்தது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் மொத்தமாக ஆஸ்திரேலிய அணி 281 ரன்கள் முன்னிலை பெற்றது. இதனால் தென் ஆப்பிரிக்க அணிக்கு 282 ரன்கள் என்ற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த இலக்கை விரட்டிப்பிடிக்க தென் ஆப்பிரிக்க அணி பேட்டிங் செய்ய உள்ளது.



## டிஎன்பிஎல்: சேலம் அணி பந்து வீச்சு தேர்வு

தமிழ்நாடு பிரீமியர் லீக்கின் 9ஆவது ஆட்டம் சேலத்தில் இன்று நடக்கிறது. இதில் ஐடிரீம் திருப்பூர் தமிழன்ஸ் சேலம் ஸ்பார்டன்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டதில் சேலம் அணி டாஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்துள்ளது.

## நாடு திரும்பிய இந்திய அணி தலைமை பயிற்சியாளர் கம்பீர்

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 20ம் தேதி தொடங்குகிறது. டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ரோகித் ஓய்வு பெற்றுள்ளதால் இந்த தொடருக்கான இந்திய அணி சுப்மன் கில் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தொடருக்கான இந்திய அணியில் சாய் சுதர்சன், கருண் நாயர், அபிமன்யு ஈஸ்வரன், பிரசித் கிருஷ்ணா உள்ளிட்ட ஜூனியர் வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். சீனியர் வீரர்களான விராட், ரோகித், அஸ்வின் இல்லாமல் களம் காணும் இந்திய அணி இந்த தொடரை வெல்ல கடுமையாக போராடும். இந்திய அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், இந்திய அணி தலைமை பயிற்சியாளர் கம்பீர் அவசரமாக நாடு திரும்பியுள்ளார். குடும்ப காரணத்திற்காக அவர் நாடு திரும்பியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அடுத்த வாரம் அவர் மீண்டும் அணியில் இணைவார் என தகவல் வெளியாகியுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.